வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ஓ.மு.எண். 3991 /ஆ4/ 2026. நாள்.21.08.2026

பொருள் : **தேர்வுகள் – வேலூர் மாவட்டம் –ஒருங்கிணைந்த குடிமைப் பணியியல் –II & II (A) பல்வேறு பதவிகளுக்கான போட்டித் தேர்வு– 01.11.2026 ஞாயிற்றுக்கிழமை (மு.ப.மட்டும்) நடைபெறவுள்ளது –தேர்வு கூடம் தெரிவு செய்தல் மற்றும் முதன்மைகண்காணிப்பாளர்கள் நியமனம் செய்தல் தொடர்பாக வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிட – அனைத்து வகை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு –தெரிவித்தல் – சார்பு.**

பார்வை : **வேலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மை ஒருங்கிணைப்பாளர் த.நா.அ.ப.தேர்வாணையம் அவர்களின் கடித ந.க.எம்.1/இ–4900571/2026 நாள் 14.08.2026**

----

பார்வையில் காணும் வேலூர் மாவட்ட ஆட்சியரின் கடிதங்களுக்கிணங்க தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு –II & II (A) பல்வேறு பதவிகளுக்கான போட்டித் தேர்வு வரும் 01.11.2026 ஞாயிற்றுக்கிழமை (மு.ப.மட்டும்) அன்று வேலூர் மாவட்டத்தில் உள்ள வேலூர் வட்டம் மற்றும் குடியாத்தம் வட்டத்தில் உள்ள தேர்வுக் கூடங்களில் நடைபெற உள்ளது.

மேற்படி தேர்வில், வேலூர் மற்றும் குடியாத்தம் வட்டத்தில் உள்ள தேர்வுக்கூடங்களில் கீழ்கண்டவற்றிற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் தேர்வெழுத எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| தேர்வு நடைப்பெறும் வட்டத்தின் பெயர் | தேர்வெழுதவுள்ள தேர்வர்களின் எண்ணிக்கை | தேர்வு நடைபெறும் நாள் |
|---|---|---|
| வேலூர் வட்டம் | 9200 | 01.11.2026 மு.ப |
| குடியாத்தம் வட்டம் | 3200 | |
| மொத்தம் | 12400 | |

எனவே, இது தொடர்பாக, தேர்வு கூடங்களை தெரிவு செய்தல் மற்றும் முதன்மை கண்காணிப்பாளர்களை நியமனம் செய்தல் தொடர்பாகவும் மேலும் மேற்படி தேர்வுக்

கூடங்களைத் தேர்வு செய்யும் பணி குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டியுள்ளதாலும் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் அனைத்து வகை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேடுகொள்ளப்படுகிரர்கள் .

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,

அனைத்து வகை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் ( இடைநிலை /தனியார் பள்ளிகள்) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.
- வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிவுடன் அனுப்பிவைக்கப்படுகிறது.